செ.வெ.எண்:31 நாள்:28.10.2021

பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் ஊரக தொழில்கள் மேம்படுத்துதல், வேலை வாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்துதல் என்ற நோக்கத்தை அடிப்படையாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டம் மயிலாடுதுறை மாவட்டத்தில் செம்பனார்கோவில் மற்றும் சீர்காழி ஆகிய வட்டாரங்களை சார்ந்த 94 ஊராட்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட பயனாளிக்ள வசதிக்காக மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு ஓரிட சேவை மையம் (One stop facility centre) செயல்படுத்தப்பட உள்ளது.இந்த மையமானது அனைத்து வகையான புதிய மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய ஊரக தொழில்களுக்கு (நுண்,சிறு,குறு,மற்றும் குழு)தேவையான தொழில் திட்டம் தயார் செய்தல்,நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல்,திறன் வளர்ப்பு போன்ற பல பணிகளை மேற்கொள்ள உள்ளது.அதன் பொருட்டு (Enterprise Development Officer) தொழில் முனைவு மேம்பாட்டு அலுவலர் -1 பணியிடம், (Enterprise Finance officer) தொழில் முனைவு நிதி அலுவலர் - 1 பணியிடம் போன்ற தற்காலிக பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் அனுபவம் மிக்க முதுகலை பட்டம் பெற்ற 40 வயதுக்குள் மிகாமல் இருக்க கூடிய தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தகுதியும், விருப்பமும் உள்ள நபர்கள் (http://www.tnrtp.org)website-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்ட விண்ணப்பதினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 15.11.2021-க்குள் வட்டார அணித் தலைவர்,வட்டார திட்ட அலுவலகம், தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம், முடிதிருச்சம்பள்ளி, மெயின் ரோடு, செம்பனார்கோயில் , தரங்கம்பாடி -609309 அல்லது மாவட்ட செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்,221, இரண்டாம் தளம் , மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம் மாவட்டம் தொலைபேசி எண் -04365-290033 என்ற முகவரியில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப,,அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.